# தேவனுடைய வசனத்தை உண்மையாய்ப் போதித்தல் (1 தீமோத்தேயு 1)

*"வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கு ... நான் மக்கெதோனியாவுக்குப் போகும்போது உன்னை எபேசு பட்டணத்திலிருக்க வேண்டிக்கொண்டபடியே செய்வாயாக" (1 தீமோ. 1:3, 4).*

பவுல், தீமோத்தேயுவுக்கு தேவனுடைய வசனத்தைப் பற்றி - அதன் ஆதார மூலம், அதன் நிறைவுத்தன்மை மற்றும் அதன் இரட்சிக்கும் வல்லமை ஆகியவை பற்றி - எழுதினார். தீமோத்தேயு, ஆரோக்கியமான உபதேசத்தின் தனிச் சிறப்பை (1:3-7) புரிந்து கொள்பவராகவும், வசனத்தின் பிழையான பயன்பாடு எதனையும் கண்டுணர்ந்து அறைகூவல் விடுப்பவராகவும் இருக்க வேண்டும் (1:7-11) என்று அவர் (பவுல்) விரும்பினார். அவர், பாவிகளை மீட்பதற்குத் தேவனுடைய தயவைப் பற்றி எழுதினார் (1:12-17) மற்றும் நம்மில் ஒவ்வொருவரிடமிருந்தும் தேவன் ஒரு தீர்மானத்தைக் கேட்கிறார் என்பதை வலியுறுத்தினார் (1:18-20).

## பாடம் 1: ஆரோக்கியமான போதனையின் தனிச் சிறப்பு (1:3-7 )

### தேவனுடைய வசனம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது (வ. 3, 4)

பவுலையும் தீமோத்தேயுவையும் சுற்றிலும் இருந்தவர்களினால் மதிப்பு மிக்க சுவிசேஷமானது தவறாகப் பயன்படுத்தப்பட்ட நிலையில், சிலர் செய்திருந்தது போல தேவனுடைய வசனத்தை தள்ளிவிடாதிருப்பதை உறுதி செய்து கொள்ளும்படி தீமோத்தேயுவுக்குப் பவுல் கட்டளையிட்டதில் வியப்பெதுவுமில்லை (1:18-20). பவுல் கிறிஸ்துவின் அப்போஸ்தலராயிருந்தபடியினால்[1] தீமோத்தேயுவுக்கு இவ்விதமான கட்டளை கொடுக்க அவர் உரிமை கொண்டிருந்தார். பவுல், "நம்முடைய இரட்சகரா

யிருக்கிற தேவனும், நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் கட்டளையிட்டபடியே" (1:1), நமது கடந்த காலப் பாவம் நிறைந்த நிலையிலிருந்து நம்மை மீட்கக் கூடிய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க(ரோமர் 3:23; எபே. 2:1-6)த் தேர்ந்து கொள்ளப்பட்டிருந்தார். அவருடைய போதித்தலானது நமக்காக ஒரு மகிமையுள்ள எதிர்காலத்தைத் திறந்து வைக்கும் (கொலோ. 1:24-28).

வசனம் 2ன்படியாக, விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு மூன்று தெய்வீக பலன்கள் அளிக்கப்பட்டன: (1) அவர் செய்ய வேண்டிய ஊழியத்தின் அளவுக்காக அவரைப் பெலப்படுத்துவதற்கு அவருக்கு "கிருபை" அளிக்கப்பட்டது (2 தீமோ. 2:1), அதன் மூலம் அவர் வளரவும் பிறருக்கு கொடுக்கவும் முடிந்தவராகும்படி அது அளிக்கப் பட்டது.[2] (2) அவரது ஊழியத்தில் அடங்கியிருந்த பல்வகைப் பொறுப்புகளை அவர் எதிர்கொண்ட பொழுது அவரது தவறுகளுக்கு "இரக்கம்"[3] அருளப்பட்டது (எபி. 4:16; எபே. 2:4-9). (3) புறம்பான சூழ்நிலைகள் எதுவாயிருப்பினும் அதைப் பொருட்படுத்தாமல் நிலைத்து நின்று ஊழியம் செய்ய அனுமதிக்கின்ற உள்ளான நிலைப்புத் தன்மையாகிய "சமாதானம்" அவருக்கு அருளப்பட்டது. ஒரு கைதி என்ற வகையில் பவுல், கவலையை ஒரு பிரசங்கியார் வெல்லும் வழியைச் செயல்விளக்கப் படுத்தினார். (பிலி. 4:4-7ஐக் காணவும்.)[4] தீமோத்தேயுவுக்குப் பவுல் வலியுறுத்திய இந்த மூன்று பலன்களைக் கவனியுங்கள்/ஆழ்ந்து சிந்தியுங்கள். உண்மையில் அந்த சுவிசேஷகரின் கரங்களில் தேவன் ஒப்புவித்த அவருடைய வசனமானது கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள் மற்றும் அனுபவங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் பொழுது வாழ்வை மாற்றும் சக்தியாக உள்ளது.

வேத வசனங்களைத் தவறாகப் பயன்படுத்துதல் நடக்கும் பொழுது, எச்சரிக்கை உணர்வுள்ள ஒரு சுவிசேஷகர், "வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடி" (1:3) தவறாகப் பயன்படுத்துபவர்களுக்குக் கட்டளையிட[5] வேண்டியவராய் இருக்கின்றார்.

"வேற்றுமையான உபதேசம்" என்பது ஒருவர் கேட்க விரும்புகின்ற காரணத்தினால் சத்தியம் என்ற வகையில் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு புராணக் கதையாக[6] இருக்கலாம் (2 தீமோ. 4:3, 4). இப்படிப்பட்ட ஒரு முன்மாதிரியானது பவுல் மற்றும் தீமோத்தேயு ஆகியோரின் காலத்தில் யூதர்கள் மத்தியில் ஒரு பிரச்சனையாக இருந்தது, ஆனால் இது "சத்தியத்தை விட்டு விலகிச் செல்லுகின்ற" (தீத்து 1:14) மனிதர்களால் வேண்டிக் கேட்கப்படுகின்ற எந்த ஒரு விஷயத்துடனும் தொடர்பு படுத்தப்படலாம் அல்லது அப்படிப்பட்ட எந்த ஒரு விஷயத்தையும் எடுத்துரைக்கலாம். இது "முடிவற்ற வம்ச வரலாறுகளை" அல்லது "நாம் ஏற்கனவே செய்துள்ளவற்றைக்" குறிப்பிடலாம். யூதர்களின் மதம் மற்றும் நாட்டு மேன்மையை வளப்படுத்தி, புறஜாதியாருக்கு எதிரான தப்பெண்ணத்தில் அவர்களை வழிநடத்துவதற்கு யூதர்களின் கடந்த கால வரலாற்றைப் பயன்படுத்துதல் என்பது பவுலின் நாட்களில் ஒரு பிரச்சனையாய் இருந்தது (மத். 3:1, 7-10; அப். 15:1-31; மாற். 7:8-13 ஆகிய வசனங்களைக் காணவும்). அந்தப்

பிரச்சனையானது "நியாயப்பிரமாணத்தைக் குறித்து வாக்குவாதங்கள்" ஏற்படக் காரணமாயிற்று (தீத்து 3:9-11).

விவாதங்கள் என்பவை "விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்தி விருத்திக்கு ஏதுவாயிராமல், கட்டுக்கதைக்கு" ஏதுவாயிருக்கலாம் (வ. 3 ; 6:4, 20; 2 தீமோ. 2:16, 23; 4:4; கலா. 2:11-3:9 ஆகியவற்றைக் காணவும்). ஊகம்[7] என்பது வீணான விசாரணைகள் மற்றும் பிரிவினைகளுக்குக் காரணமாகலாம், ஆனால் அதிலிருந்து நன்மையான எதுவும் வராது! மாற்கு 14:53-59ஐ அப். 6:8-14உடனும் மற்றும் மாற்கு 15:22-24ஐ அப். 7:57-60உடனும் ஒப்பிடுவதால் இவ்வகையான செயலுக்கு வலிவான இரு உதாரணங்களைக் கண்டறிய முடியும். இவற்றில் ஒன்று கிறிஸ்து சிலுவையில் அறையப்படுதலில் முடிந்தது, இன்னொன்று ஸ்தேவான் சாகும்படி கல்லெறியப்படுதலை விளைவித்தது! இந்த நடக்கையினால் பலருக்கு ஆவிக்குரிய மரணம் உண்டாயிற்று (மத். 7:20). ஒவ்வொரு சுவிசேஷகரும், அழிக்கும் இயல்புடைய விவாதங்களை வெற்றி கொள்ள உதவும் ஞானத்தினால் ஆசீர்வதிக்கப்படுவார்களாக.

## தேவனுடைய வசனம் நடைமுறைப்படுத்தப்பட்டது (வ. 5)

நமது சிந்தனையானது மனிதரின் தவறுகளை நோக்கியின்றி, தேவனுடைய நிர்வாகம் அல்லது "யுகத்தை"[8] (ASV) நோக்கி முடுக்கி விடப்படும் பொழுது தேவனுடைய போதனையானது வனப்புமிக்க மக்களையும் சுவிசேஷகர்களையும் கட்டி எழுப்புகின்றது. இந்த நற்சிந்தனையானது பவுலினால் தரப்பட்ட ஐந்து மடங்கான பண்பு ஆராய்வின் மூலமாக, உண்மை நிலையாக மலருகின்றது:

(1) ஒருவருடைய சிந்தனையானது "விசுவாசத்தில்"[9] அடிப்படையாக உள்ளது. விசுவாசமானது அந்நபர் ஊழியம் செய்கின்ற பகுதியிலும் மற்றும் அவர் அல்லது அவள் எந்த ஆதார மூலத்தினால் ஊழியம் செய்கின்றாரோ அதையும் கொண்டுள்ளது (2 கொரி. 5:7; அப். 6:7 ஆகியவற்றைக் காணவும்).

(2) ஒருவருடைய சிந்தனையானது அன்பினால் தூண்டப்பட்டு ஆளப்படுகின்றது (1 யோவா. 4:19; 2 கொரி. 5:14, 15; யோவா. 13:34, 35; 1 பேது. 1:22).

(3) ஒருவருடைய சிந்தனையானது சுத்த இருதயத்திலிருந்து வருகின்றது (தீத்து 1:15, 16; 1 யோவா. 3:3 ஆகியவற்றைக் காணவும்). இது பிரசங்கியார்கள் கொண்டிருக்கக் கூடிய எவ்விதமான சுயநல, அதிகாரத்தை நாடுகின்ற, பொறாமையான நடக்கையையும் என்றென்றைக்குமாக முடிவு கட்டிவிடும்.

(4) ஒருவருடைய சிந்தனையானது நல்மனச்சாட்சியிலிருந்து வருகின்றது (அப். 23:1). தேவனிடத்திற்கு நல்மனச்சாட்சியுடன் வரும் மக்கள் மூலமாக தேவன் செய்யக்கூடிய மாபெரும் செயல்களுக்குப் பவுல் ஒரு நிரூபணமாக இருக்கின்றார்.

(5) ஒருவருடைய சிந்தனையானது உண்மை விசுவாசத்தினால் பண்பு

படுத்தப்படுகின்றது (2 தீமோ. 1:5; யாக். 2:17). விசுவாசம் என்பது இந்தப் பண்பு கட்டியெழுப்பப்படும் ஆதார மூலமாக அல்லது அடிப்படையாக இருக்கையில், விசுவாசமே அந்த ஆதார மூலத்திலிருந்து கட்டியெழுப்பப் படும் தனிப்பட்ட நம்பிக்கை/தைரியமாகவும் உள்ளது. சிலரை ஏமாற்றும் மற்றும் பிறரை அவநம்பிக்கைக்குள்ளாக்கும் ஒரு தவறான கருத்தை முன்னிலைப்படுத்தும் போலியோ அல்லது நடிப்போ இங்கு இல்லை. (போலிக் கதைகளையல்ல) கிறிஸ்துவின் உடன்படிக்கையை கேட்பதினால் விசுவாசம் வருகின்ற பொழுது பற்றிக் கொள்வதற்கு அது எத்தனை அழகாய் உள்ளது (ரோமர் 10:15-17)!

## தேவனுடைய வசனம் தவறாக நடைமுறைப்படுத்தப்பட்டது (வ. 6, 7)

சில வேளைகளில், விரும்பத்தகாத, வஞ்சிக்கிற போதகர்கள் தேவனு டைய வசனத்தை தவறாகப் பயன்படுத்தி, தவறாக நடைமுறைப் படுத்துகின்றனர். இந்த ஆத்துமாக்கள் "இலக்கைத் தவறவிட்டிருக் கின்றனர்."[10] ஒருவர் வேத வசனங்களைப் படித்தும்கூட இரட்சகரைத் தவற விடக்கூடும் (யோவா. 5:39, 40ஐக் காணவும்). கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற மக்களும்கூட தாங்கள் "விசுவாசத்தில்" இருக்கின்றனரா இல்லையா என்பது பற்றித் தங்களைத் தாங்களே சோதித்தறிவது அவசியம் (2 கொரி. 13:5). தேவனுடைய மக்கள் சுத்த இருதயத்தின் அன்பை விட்டு நீங்கி, நல்மனச் சாட்சியைக் கைவிட்டு, தங்கள் விசுவாசத்தை போலிப் பொருளாக்கும் பொழுது இந்த சந்தர்ப்பப் பொருளின்படி, இலக்கைத் தவற விடுதல் நடக்கின்றது (1:5, 6).

கிறிஸ்தவர்கள் "பொருளற்ற/கனியற்ற விவாதத்தின் பக்கமாய்"[11] திரும்புகின்ற பொழுது மயங்கும் சூழ்நிலையானது நிச்சயமாகவே இடர்ப்பாடு உண்டாக்குகின்றது. தீத்து 1:10ல் உள்ள வகையான நபர், ராபின்சன் அவர்களால் "வெறுமனே அலைபவர்"[12] என்றும் தாயெர் அவர்களால் "சோம்பற் பேச்சுக்காரர், வெறுமையான கருத்தற்ற விஷயங் களைப் பேசுபவர்"[13] என்றும் விவரிக்கப்படுகின்றார். எண்ண முடியாத அளவுகளில் இழந்துபோகப்பட்ட நேரமும் குழப்பமும், வேத வசனங் களுடன் தெளிவற்ற வகையில் மட்டுமே தொடர்புடைய விஷயங்கள் பற்றிய பொருளற்ற விவாதங்களின் கனிகளாக இருந்துள்ளன. சாத்தானுக்காக சகோதரர்கள் தங்களின் "மிகச் சிறந்த அடிவைப்பை" இடும் பொழுது அவன் (சாத்தான்) நிச்சயமாகவே மகிழ்ச்சியடைபவனா யிருக்க வேண்டும்!

வெறுமனே அலைபவர்கள் தேவனுடைய வசனத்தைப் புரிந்து கொள்ளாதிருந்தும், தாங்கள் புரிந்து கொள்ளாதவைகளைப் பற்றி "தைரியமிக்க உறுதிப்பாடுகளை ஏற்படுத்தும்"[14] பொழுது இரட்டிப்பான இடர்ப்பாடு வருகின்றது. இந்த வகையிலான சகோதரர்கள் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்ததிலிருந்து சில "விஷயம்," "பொழுது போக்கு" அல்லது "புதிதாய்க் கண்டறிந்த மிகச் சிறந்த கொள்கை"யினால் மற்றவர்களின்

விசுவாசத்தை மரணத்திற்குள்ளாக்கி வலியுறுத்துவதில் அதிகமாய் உணர் வெழுச்சியடைந்தவர்களாகின்றனர். அவர்கள், கர்த்தருடைய சரீரத்தைப் பிரிவினைப்படுத்தும் இப்படிப்பட்ட விரோதத்தை வளர்க்கக் கூடும்.

கள்ள போதகத்தில், அபாயமான மற்றும் அழிவு ஏற்படுத்தும் இரு பிரச்சனைகள் அடங்கியுள்ளன. முதலாவது, வஞ்சிக்கப்பட்ட ஆத்துமா வானது நம்ப இயலாத ஊக்கத்துடன் இயங்கக் கூடும். இந்த சத்தியத்திற்குப் பவுல் தாமே ஒரு எடுத்துக்காட்டாக உள்ளார். இரண்டாவது, தைரியத் துடன் ஏற்படுத்தப்படும் தவறான உறுதிப்பாடுகளை சில மக்கள் நம்புவார் கள் (ரோமர் 16:17, 18). யாரேனும் இவ்விதமான வீணான, முரட்டாட்ட மான போதனைகளுக்குத் திரும்பிச் சென்றால், அவர்களின் நிலை பற்றிப் பேதுரு, "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்" (2 பேது. 2:18-20; வெளி. 2:4, 5; 3:14-18ஐக் காணவும்) என்று கூறினார்.

பல நூற்றாண்டுகளாகத் தொந்தரவுக்குட்பட்ட சீஷர்கள் மற்றும் குழப்பமுற்ற சபைகளுக்குப் பிறகு, நாம் சற்று நிதானித்து, "வேதாகம ரீதியற்ற போதனைக்குத் திரும்பும்படி சகோதரரை வழிநடத்துகின்றது என்ன?" என்று கேட்பது அவசியமாக உள்ளது. இடர்ப்பாடு உண்டாக்கும் மக்களின் ஐந்து பண்புகளை வில்லியம் பார்க்ளே அவர்கள் உற்றுக் கவனித்துள்ளார்.[15]

முதலாவது, கள்ளப் போதகர் புதுமைக்கான ("நமது பழைய பாரம்பரிய வழிகளில்" இருந்து மாற்றம் என்ற வகையில் சில புதிய விஷயங்களுக்கான) விருப்பத்தினால் இயக்கப்படுகின்றார். சில பாரம்பரியங்களில் இருந்து நாம் மாற்றம் ஏற்படுத்த வேண்டியது அவசியமாய் இருக்கலாம், ஆனால் மாற்றத்திற்கான அவசியம் கொண்டுள்ள ஒருவர், அச்செயல்முறையில் சத்தியத்தைக் கைவிடாதிருத்தல் முக்கியமானதாக உள்ளது. (அப். 17:21ஐக் காணவும்.) நாம் "குளிப்பாட்டிய நீருடன் குழந்தையையும் வெளியே எறிந்து விட"க் கூடாது.

இரண்டாவது, அவர் வேத வசனத்தில் அல்ல, யூகத்திலேயே சிந்தையை மேன்மைப்படுத்துகின்றார் (மாற். 7:8-13; ரோமர் 1:21-25ஐக் காணவும்).

மூன்றாவது, அவர் செயல்பாட்டிற்கு(அல்லது ஊழியத்திற்கு மத். 23:1-4; 1 தீமோ. 6:4, 5)ப் பதிலாக விவாதங்களில் ஈடுபடுகின்றார்.

நான்காவது, அவர் தாழ்மையினால் இயக்கப்படுவதற்கு மாறாக முரட்டுத்தனத்தினால் இயக்கப்படுகின்றார் (1 தீமோ. 1:7; 2 தெச. 2:2-4, 9-11; மத். 16:21-23 ஆகியவற்றை 1 பேது. 5:1-7உடன் காணவும்).

ஐந்தாவது, அவர் அறிவு இணைந்திராத போதனைக் கொள்கையின் குற்ற உணர்வு கொண்டவராக இருக்கின்றார் (1 தீமோ. 1:7; ரோமர் 10:1-3; 2 பேது. 2:17-19; 3 யோவா. 9, 10).

இந்த ஐந்து முன்மாதிரிகள் யாவற்றையும் எந்த நபரும் பின்பற்ற மாட்டார் என்றிருக்கையில், சில உறுப்பினர்கள் இந்தப் பகுதிகளில் ஒன்று அல்லது அதிகமானவற்றில் சிக்கிக்கொண்டு, அதை பிசாசின்

*ஆராதனையுடன் பின் தொடர்ந்து கொண்டிருப்பதால் பல சகோதரர்கள் துன்புற்றுள்ளனர்.*

*நமது ஆத்துமாக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நம்மில் ஒவ்வொருவரும், இந்த ஐந்து பகுதிகளில் ஏதேனும் ஒன்றினால் பாதிக்கப்படக் கூடியவராய் இருக்கின்றோமா என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து'' (1 தெச. 5:21), நாம் இரட்சிக்கப்பட்டுள்ள "வசனத்தை உறுதியாய்ப் பற்றிக் கொள்வோமாக" (1 கொரி. 15:2).*

---

## *எந்தப் பிரமாணம்? (1 தீமோ. 1:7-11)*

*1:7, 8ல் உள்ள "நியாயப்பிரமாணம்" என்பது எது? பவுல், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். இருப்பினும், அவரது தர்க்கத்தின் முடிவில், கிறிஸ்துவின் பிரமாணமே அவரது அக்கறைக்குரிய விஷயமாய் இருந்தது என்பதும் - பிரமாணம் என்ற வகையில் - அது பிரமாணத்தைக் குற்றப்படுத்துபவர்களை எவ்வாறு கையாண்டது என்பதும் தெளிவாகின்றது (1:9, 10). இவ்விதமாகப் பவுல், நியாயப்பிரமாணத்தின் ஏற்புடைய பயன்பாடு பற்றிக் கலந்துரையாடினார்.*

*குற்றத்தையும் மோசடியையும் களைவதற்காகத் தேவனால் தரப்பட்ட பிரமாணமானது நல்லதாக இருந்தது (ரோமர் 13:1-7; கலா. 3:19). தேவனுடைய பிரமாணத்தைச் சிலர் கண்டுங்காணாதிருந்தனர் (உபா. 12:8; நியா. 2:10, 11; 21:25); மற்றவர்கள் அதற்குத் தங்களின் கீழ்ப்படிதலைத் தாமதப்படுத்தினர் (பிர. 8:11). இன்னும் பிறர் தவறான மக்கள் மீது பிரமாணத்தைச் சட்டபூர்வமாக அமலாக்கவோ (அப். 2:22-24) அல்லது புகுத்தவோ முயற்சி செய்தனர்.*

*பொதுவாக, ''பிரமாணம்'' என்பது நீதியுள்ள மக்களுக்காக ஏற்படுத்தப்படவில்லை. "ஆரோக்கியமான[16] உபதேசத்தைப்" புறக்கணித்த குற்றம் செய்திருந்தவர்கள் பற்றிய அட்டவணையொன்றைப் பவுல் ஏற்படுத்தினார்:*

| | | |
|---|---|---|
| *அக்கிரமக்காரர்கள்[17]* | *சீர் கெட்டவர்கள்[21]* | *மனுஷரைத் திருடுகிறவர்கள்[24]* |
| *அடங்காதவர்கள்[18]* | *தாய் தகப்பன்மாரை அடிக்கிறவர்கள்* | *பொய்யர்கள்[25]* |
| *பக்தியில்லாதவர்கள்[19]* | *கொலை பாதகர்கள்* | *பொய்யாணை இடுகிறவர்கள்[26]* |
| *பாவிகள்[20]* | *வேசிக்காரர்கள்[22]* | *ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாய் உள்ள மற்ற யாவரும்* |
| *அசுத்தர்கள்* | *ஆண்புணர்ச்சிக்காரர்கள்[23]* | |

*பொல்லாத வழிகளிலிருந்து மனிதரை தடை செய்கின்ற பிரமாணமானது வசனம் 11ல் தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளது, இது தேவன் மகிமைக்கென்று ஏற்படுத்திய சுவிசேஷம் என்பது வசனம் 11ல் தெளிவாய் உள்ளது.*

## பாடம் 2: ஒரு மீட்கப்பட்ட பாவி (1:12-17)

அதிகாரம் 1ன் முதல் பதினோரு வசனங்கள், மகிமையுள்ள சுவிசேஷ மானது, அது வடிவமைக்கப்பட்ட நல்ல ஊழியத்தைச் செய்யும்படியாக தேவனுடைய வசனத்தின் மீதான தவறான பயன்பாடுகளையும் தவறான நடைமுறைகளையும் வெற்றி கொள்ளும்படி இளம் சுவிசேஷகரான தீமோத்தேயுவுக்கு பலத்த வேண்டுகோள் விடுத்தன. இந்த நற்செய்தியானது தீமோத்தேயுவுக்கு - மற்றும் பொதுவாக பாவத்தினால் பீடிக்கப்பட்டுள்ள மக்களுக்கு - எதன் அடிப்படையில் திறக்கப்பட்டிருந்ததோ, அதைப் பற்றிப் பவுல் தீமோத்தேயுவுக்கு ஒரு பலத்த ஊக்குவித்தலை அளித்தார்.

மனிதர்கள் மத்தியில் பரப்புவதற்காக இந்த சுவிசேஷத்தைத் தேவன் பவுலிடம் ஒப்புவித்திருந்தார் அல்லது நம்பிக்கைக்கு உட்படுத்தியிருந்தார் என்பதை உணர்ந்தறிவது பவுலுக்கு அர்த்தம் நிறைந்ததாக இருந்திருக்க வேண்டும்.[27] அடுத்த வசனப் பகுதியில் பவுல் தமது மாபெரும் நன்றி உணர்வை வெளிப்படுத்தினார் (1:12-17).

### நன்றி நிறைந்த ஒரு ஊழியக்காரர் (வ. 12)

பவுலின் தனிப்பட்ட பயன்கள்[28] கிறிஸ்துவை அவர் உற்று நோக்கி "நான் [அவருக்கு] நன்றி செலுத்துகிறேன்" என்று கூறக் காரணமாயின. அந்தக் கூற்றில் இருக்கும் அர்த்தத்தையும் அந்த மாபெரும் உணர்வுப் பூர்வமான கருத்தை எழுதிய மனிதரைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தியுங்கள். இது மேலெழுந்த வாரியான "உங்களுக்கு நன்றி" என்பதை விட மிகவும் அதிக மானதாக உள்ளது. இந்த வார்த்தைகள், ''கிறிஸ்துவுக்குள்'' இருந்த காரணத்தால் அழிவையும் நாசத்தையும் பெற்ற உடம்பையுடைய ஒரு மனிதரிடமிருந்து (2 கொரி. 4:11; 11:23-31) வந்தன. "உபத்திரவத்தின் மாபெரும் சோதனையில்'' தேவனுடைய கிருபையானது எவ்வாறு "பரிபூரண சந்தோஷத்தை" விளையச் செய்ய முடியும் என்பதற்குப் பவுலின் வாழ்வானது ஒரு விளக்கவுரையாக இருந்தது (2 கொரி. 8:1-3, 7; அப். 16:22-34ஐக் காணவும்). இது மாய்மாலமோ அல்லது பித்தம் கொண்ட நிலையோ அல்ல. சோதனைகளின் விளைவாக நாம் கிறிஸ்துவுக்குள் அனு பவிக்கும் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் நமக்கு வருகின்ற சோதனைகள் மிகக் குறைவான முக்கியத்துவமுடையவைகளாய் உள்ளன என்பதை நமக்கு வலிவாய் நினைவூட்டுகின்றது. பேதுரு மற்றும் பிற அப்போஸ்தலர் களுடன் யோபுவும் பவுலும் (அப். 5:41; 4:19-21) கிருபையானது வளர்ச்சிக்கு ஒளி வீசும் எடுத்துக்காட்டுகளாய் உள்ளனர் (2 பேது. 3:18). தகுதியான ஒரு காரணத்திற்காக வேதனையானது சகித்துக் கொள்ளப்படும் பொழுது, அந்த வேதனையில் நாம் நன்றியுடைமையைப் பெற்றிருப்பது சாத்தியமே என்று அவர்கள் விவரிக்கின்றனர் (யாக். 1:2-4; பிலி. 3:7-11).[29]

வசனம் 12ல் பவுல், "என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த

ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன்" என்று எழுதினார். கர்த்தர் பவுலை இந்த மேன்மையான ஊழியத்திற்கென்று நியமித்து, அவரை ஊழியம் செய்ய வல்லவராக்கி, அவர் ஊழியம் செய்கையில் அவரை உண்மையுள்ளவரென்று கருதியதால், தேவனுக்கு நன்றி செலுத்துதல் என்பது முறையானதாகவே இருந்தது. இந்த நன்றி யுணர்வைக் கற்றுக் கொள்ளுகிற எந்த சுவிசேஷகரும் ஒரு சபையின் அமைவில், பிரச்சனை ஒன்றினால் சுருங்கிப் போகவோ அல்லது பொறுப்பிலிருந்து ஓடிப் போகவோ மாட்டார். அவர் பராமரித்தல், சகித்தல், பழுது நீக்குதல், மீட்டல் மற்றும் மீளக்கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் கிருபை நிறைந்த கலைகளைக் கற்றுக் கொள்வார் (யாக். 5:19, 20; கலா. 6:1, 2; எபே. 5:15-18; 2 தீமோ. 4:2-5 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்).

சுவிசேஷக் கடமை என்ற சட்டகத்தினுள் நன்றி நிறைவுடன் வாழ்ந்திருந்த பவுல், தாம் ஏன் நன்றி நிறைந்தவராய் இருந்தார் என்பதை 1:12-16ல் விரிவாக விளக்கம் அளித்தார். தீமோத்தேயுவும் மற்ற சுவிசேஷகர்கள் யாவரும் தங்கள் தெய்வீகப் பணிப் பொறுப்பின் நிலைப்பாடு குறித்து இதை (நன்றியுடைமையை) வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் ஆவலுடன் விரும்பினார்.

கர்த்தர் பவுலைப் பெலப்படுத்தியதால், உபத்திரவத்தின் முன்னிலையில் பவுல் நன்றி நிறைந்தவராய் இருக்க முடிந்தது. நம்மை பெலப்படுத்த அல்லது நம்மை வல்லவர்களாக்க[30] நாம் தேவனைச் சார்ந்திருக்க வேண்டும். அவரை விட்டுப் பிரிந்த நிலையில் நாம் ஒன்றும் செய்ய முடியாது (யோவா. 15:5), ஆனால் அவர் மூலமாக நாம் செய்யும்படி அவர் விரும்புகின்ற யாவற்றையும் நாம் செய்ய முடியும் (பிலி. 4:13; 2 கொரி. 9:8-10).

தேவன் நம்மை உண்மையுள்ளவர்கள்[31] என்றெண்ணுகின்ற போது, அது உண்மையிலேயே மதிப்புள்ளதாக இருக்கிறது. நம்மைப் படைத்தவருடைய நம்பிக்கையை நாம் பெற்றுள்ளோம் என்று அறிவது எவ்வளவு அற்புதமான உற்சாகப்படுத்துதலாக உள்ளது! இந்த அழகிய சிந்தனையானது சபையின் மூப்பர்களிடத்தில் சகோதரர்கள் கொண்டிருக்க வேண்டிய மரியாதையை விளக்கப்படுத்துகிறது. பவுலின் "ஊழியத்தில்"[32] அவரை கர்த்தர் எவ்வாறு மதித்தார் என்பதைப் பவுல் ஆழ்ந்து சிந்தித்த பொழுது அவருக்கு (பவுலுக்கு) இந்தக் கருத்தானது இன்னும் அதிகமாய் வளமுடையதாயிருந்திருக்க வேண்டும்.

கர்த்தர் பவுலிடம் இவ்வளவு மதிப்புக் கொண்டிருந்தபடியால், பவுலை அவர் (கர்த்தர்) தம்முடைய ஊழியத்தில்[33] "நியமிக்க"[34] அவர் (கர்த்தர்) உலகத்தின் மாபெரும் நியமிப்பவராக ஒருவர் எதிர்பார்க்கலாம். நித்திய மானவருடன் அணி சேரும்படி சுவிசேஷகர்கள் அழைக்கப்படுகின்றனர்!

## ஒரு முன்னாள் கலகக்காரர் (வ. 13)

ஒரு காலகட்டம் வரையிலும் பவுல் மும்மடங்கு பயங்கரமானவராய் இருந்துள்ளார். அவர் தேவதூஷணம் கூறுபவராகவும், துன்புறுத்துபவராகவும் மற்றும் வன்மையான சண்டையிடுபவராகவும் இருந்துள்ளார்.[35]

அறியாமையும் (சவுல் கிறிஸ்துவை அறிந்திருந்ததில்லை) மற்றும் அவிசுவாசமும் (யூதப் பாரம்பரியமானது அவரது சிந்தனையைக் கட்டுப் படுத்திற்று) பவுலை அவர் கேட்ட சத்தியம் எதையும் காண்பதையும் ஏற்றுக் கொள்வதையும் அவருக்குத் தடை செய்தது (1 கொரி. 2:7, 8; மத். 13:14, 15; மாற். 7:6-13 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்). இது பவுலை கர்த்தருடைய இரக்கம் அதிகமாய்த் தேவைப்பட்ட நிலையில் விட்டது. பவுல் புசியாமல் மற்றும் குடியாமல் இருந்த அந்த மூன்று நாட்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள் (அப். 9:1-9). இந்த நிலையில், பவுலைப் போன்ற அப்படிப்பட்ட தவறின் சுழற்காற்றினுள் தேவன் சாத்தியக் கூறுகளைக் காண முடிந்தது என்றால், "தேவன் என்னை விரும்ப மாட்டார்" என்று கூற வேண்டிய எவரொருவரையும் நாம் நிச்சயமாக ஒருக்காலும் காண மாட்டோம். தேவன் நம்மில் அன்புகூருகிறார் என்பதையும் நாம் சென்று போதிக்க நாடுகின்ற யாவரையும் அவர் அன்புகூருவார் என்பதையும் நாம் இதயத்தில் பதிய வைத்துக் கொள்வோமாக!

## தேவனுடைய கிருபையின் விரிவான செயல்விளக்கம் (வ. 14-16)

மீட்பரின் உயிர்த்தெழுதல் மற்றும் தரிசனத்தினால் தேவனுடைய கிருபையானது பவுலுக்கு அளிக்கப்பட்டது (அப். 22:1-10). பவுலுக்கு அளிக்கப்பட்ட இயேசுவின் தரிசனமானது அவருக்குள் விசுவாசத்தில் அஸ்திபாரமிடப்பட்ட ஒரு உறுதிப்பாட்டை உண்டாக்கியது (ரோமர் 1:1-5). தேவனுடைய இரக்கமானது பவுலுக்குள் ஒரு அன்பின் நிலைப் பாட்டை ஏவி, மகிழ்வு நிறைந்த கீழ்ப்படிதலைத் தூண்டியது (யோவா. 14:15; அப். 9:17-20; 22:10-16; எபி. 5:8, 9).

இந்த அழகிய திட்டத்தில் நாம், பாவிகளில் முதன்மையானவரைக் கூட இரட்சிக்கக் கூடிய மீட்பின் வல்லமையைக் காண முடியும். கிறிஸ்தவர் களைப் பவுல் துன்புறுத்திக் கொண்டிருந்த மாதங்களினூடே நாம் மீட்பருடைய பொறுமை அல்லது "நீடிய பொறுமையை" (KJV)[36] காண முடியும். பவுல் கர்த்தருடைய மக்கள் மீது அவ்வளவு வன்முறையைக் காண்பித்த பிறகு (கூட) அவருக்கு வாய்ப்பளித்ததினால் கிறிஸ்து இந்த ஆவியை எவ்வளவாய் வெளிப்படுத்தினார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! இந்தப் பண்பின் இரு படிநிலைகளை வில்லியம் பார்க்ளே அவர்கள் சுட்டிக் காண்பித்தார்: (1) இது கிறிஸ்துவைப் பவுலுக்கு "ஒருக்காலும் விட்டுக் கொடுக்காத நிலைவரமான ஆவியைக்" கொடுக்கும்படி காத்துக் கொண்ட தாகவும் உங்களிடம் மற்றும் என்னிடம்கூட அவ்வாறு கொடுக்கும்படி அவரை (கிறிஸ்துவை) காத்துக் கொள்வதாகவும் உள்ளது; (2) இது "ஒரு மனிதர் தம் சக மனிதர்கள்மீது கொண்டிருக்க வேண்டிய எண்ணப் போக்கின் ..."[37] நீடித்த ஆவியாக உள்ளது. இது, அவமானம் அல்லது புண்படுத்துதலைத் தாங்கிக்கொள்ள மறுத்தல் என்று அரிஸ்டாட்டில் விளக்கப்படுத்திய கிரேக்க ஒழுக்க நெறிக்கு முற்றிலும் எதிரிடையானதாக உள்ளது. கிரேக்கர்களைப் பொறுத்தமட்டில், பழி வாங்கும்படி வெளிக்

கிளம்புபவரே பெரிய மனிதராயிருந்தார். கிறிஸ்தவரைப் பொறுத்தமட்டில், அவ்வாறு செய்ய முடியும்போதுகூட அதை(பழி வாங்குதலை)ச் செய்ய மறுக்கின்றவரே பெரிய மனிதராக இருக்கின்றார். மேலும், நாம் தேவனுடைய நோக்கத்தையும் காண முடியும்: அவர், தம்முடைய இரக்கமானது நம்மை நித்திய வாழ்வு வரை அணைத்துச் செல்லும் என்பதை அறிந்து, எல்லாரும் விசுவாசித்துக் கீழ்ப்படிவதற்குப் பவுலின் மனமாற்றத்தை ஒரு உதாரணமாகப் பயன்படுத்தினார்.

### *தேவனுக்கு ஒரு புகழுரை (1 தீமோ. 1:17)*

தேவனுடைய கிருபையும் இரக்கமும், நாம் எவ்வளவு அற்புதமான சிருஷ்டிகரைக் கொண்டுள்ளோம் என்பதைப் பவுலுக்கு நினைவூட்டின. அவரது நம்பிக்கைக்குரிய ஆதாரச் சான்றுகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

| தேவன் பின்வருமாறு உள்ளார்: | | இது நம்மை பின்வருவனவற்றிற்கு அழைக்கின்றது: |
|---|---|---|
| நித்தியமான இராஜன் | --- முடிவற்ற வல்லமை | --- கீழ்ப்படிதல் |
| அழிவில்லாதவர் | --- முடிவற்ற தூய்மை | --- போலச் செய்தல் |
| அதரிசனமானவர் | --- காணப்படாத பாதுகாப்பு (யோவா. 1:18; 2 கொரி. 5:7; சங். 19:7-11) | --- விசுவாசம் |
| ஒரே தேவன் | --- தனிச்சிறந்த தெய்வீகம் (யாத். 20:1-5; ஏசா. 44:6; ஓசி. 13:4) | --- ஒப்புயர்வற்ற நிலை |

தேவனுடைய இயல்பானது நாம் அவருக்கு கனத்தையும் மகிமையையும் என்றென்றைக்கும் கொடுக்கும்படி அழைக்கின்றது.

## *பாடம் 3: முடிவு எடுப்பதற்கான ஒரு வேண்டுதல் (1:18-20)*

## *"நல்ல போராட்டத்தைப் போராடுங்கள்" (வ. 18, 19அ)*

பாவிகளில் முதன்மையானவரைக் கூட மீட்கும்படியான தேவனுடைய கிருபையானது, ஒவ்வொரு நபரின் வாழ்விலும் அவருடைய வசனம் வழிகாட்டியாயிருக்கும் என்று உத்தரவாதப்படுத்துவதில்லை. இது, வாழ்வின் யுத்தங்களில் நேர்மையாகவும் வீரமாகவும் நிலைநிற்க

தேவனுடைய ஆணைகளுக்கு (“தீர்க்கதரிசனங்கள்”; 1:18; 2 பேது. 1:20, 21) தனிப்பட்ட உறுதிப்பாட்டை, ஒப்புக் கொடுத்தலை வேண்டுகிறது. ஆகையால் பவுல், தீமோத்தேயுவுக்கு “நல்ல போராட்டத்தைப் போராடும் படி” (2 கொரி. 10:3-6; எபே. 6:10-19ஐக் காணவும்) கட்டளையிட்டார். இந்த இலக்கைச் சாதிப்பதற்கான வழிமுறை இருமடங்கானதாக உள்ளது: ஒரு “நல்ல மனச்சாட்சி”[38] மற்றும் ஒரு “உண்மையான விசுவாசம்” (1:5).

தேவனுடைய வசனம் அல்லது “தீர்க்கதரிசனம்” என்பது விசுவாசத் தைக் கட்டியெழுப்புகிறது (ரோமர் 10:17). ஒருவர் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளும் பொழுது, அவர் ஒரு நல்மனச்சாட்சியைக் கட்டி எழுப்புவார். நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறோம் (ரோமர் 5:1, 2; கலா. 3:26, 27), விசுவாசத்திலே நடந்து கொள்கிறோம் (2 கொரி. 5:6), விசுவாசத் தினால் உலகத்தை ஜெயிக்கிறோம் (1 யோவா. 5:4) மற்றும் விசுவாசத் தினால் கிறிஸ்துவின் இயல்பை மேற்கொள்கிறோம் (கலா. 2:20). நமது விசுவாசம் நீதியாக எண்ணப்படுகிறது (ரோமர் 4:3-5), விசுவாசமென்னும் கேடகத்தினாலே சாத்தானுடைய அக்கினியாஸ்திரங்கள் எல்லாம் அவித்துப் போடப்படுகின்றன (எபே. 6:16). தீமோத்தேயு விசுவாசத்தைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பியதில் வியப்பெதுவும் இல்லை! ஒவ்வொரு சுவிசேஷகரும் வசனத்தின்மீது கட்டி எழுப்பப் பட்டுள்ள விசுவாசத்தின் வட்டாரத்திலேயே தமது வாழ்வையும் ஊழியத்தையும் இயக்க வேண்டும்.

தீமோத்தேயுவுக்கான கட்டளையில் பவுல் உள்ளடக்கிய மூன்று காரணிகளில் எதையாவது நீக்கிப் போட முயற்சி செய்யும் எந்த சுவிசேஷ கருக்கும் ஐயோ. அவர் இந்தக் கட்டளையை *வசனமின்றி(யே)* காத்துக் கொள்ள முயற்சி செய்தால், அவரது பாதங்கள் விரைவிலேயே தவறான திசையில் திரும்பும் (எரே. 10:23). அதை அவர் *விசுவாசமின்றி(யே)* காத்துக் கொள்ள முயற்சி செய்தால், அவர் ஏதொன்றையும் நிறைவேற்ற மாட்டார் (மத். 25:24-30; மாற். 9:17-23). அதை அவர் *நல்மனச்சாட்சியின்றி(யே)* காத்துக்கொள்ள முயற்சி செய்தால், அவரது பாதங்களும் கால்களும் தைரியக் குறைவினால் தள்ளாடும் (1 சாமு. 17:21-25; 28:5-7, 15, 20, 21; லூக். 5:3-11ஐயும் காணவும்). பவுலின் கட்டளையிலிருந்து விலகிச் செல்லுதல் எதுவும் அலைந்து திரிபவரை, தூஷியாதபடிக்கு பவுல் ‘‘சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்த’’ இமெனே மற்றும் அலெக்சந்தர் ஆகியோரின் பயங்கரம் நிறைந்த ஓட்டத்தில் முன்னிறுத்தும் (1:20).

## சாத்தானுடன் விலகி சென்று விடாதீர்கள் (வ. 19ஆ, 20)

இமெனேயும் அலெக்சந்தரும், பவுல் வலியுறுத்திய ஆணைகள், விசுவாசம், மற்றும் நல்மனச்சாட்சி ஆகியவற்றிலிருந்து தங்களை[39] விலக்கிக் கொண்டனர். இவ்விரு மனிதர்களும் விசுவாசமுள்ளவர்களாய் நிலைத்திருக்க ஏராளமான வாய்ப்பைக் கொண்டிருந்தனர் என்பதைப் பவுலின் வார்த்தைகள் எவ்வளவு வலிவாக அறிவிக்கின்றன! அவர்கள்

*(தங்களுக்கு) அன்புடன் அளிக்கப்பட்ட தெய்வீக மற்றும் மனித ரீதியான செல்வாக்குகளை மறுத்தனர்.*

*அவர்கள் "தங்கள் விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள்" என்ற உண்மையானது அவர்களின் தனிப்பட்ட அழிவை அறிவிப்பதோடு, "ஒருமுறை விசுவாசத்தினுள் இருப்பவர் எப்பொழுதும் விசுவாசத்தினுள் இருக்கிறார்" அல்லது "ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர் எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவராகவே இருக்கிறார்" என்ற கோட்பாட்டிற்கு எதிராகக் குரல் எழுப்பவும் செய்கிறது. (1 தீமோ. 4:1; கலா. 5:4ஐக் காணவும்.)*

*இந்த மனிதர்களைப் பவுல் "சாத்தானுக்கு" ஒப்புக் கொடுத்தார் என்ற உண்மையானது (மத். 18:15-18; தீத்து 3:10,11; 2 தெச. 3:6, 14, 15; 1 கொரி. 5:1-5) யோவான் 8:44ல் கிறிஸ்துவின் முன்மாதிரிக்கு ஒப்பாக உள்ளது. அவர் (கிறிஸ்து) பின்வருமாறு கூறினார்:*

> *நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதி முதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால், அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.*

*சாத்தானின் வேதாகமம் என்ற நூலின் எழுத்தாளரான அன்ட்டோன் S. லாவே என்பவர், "... நீங்கள் பிசாசின் விளையாட்டை (game) விளையாடப் போகிறீர்கள் என்றால், பிசாசின் பெயரை (name) ஏன் தரித்துக் கொள்ளக் கூடாது?"[40] என்று உரைத்தார்.*

*அவர்களை - சாத்தானுக்கு ஒப்புக் கொடுத்தலில் கூட - அவர்கள் "தூஷியாதபடிக்கு சிட்சிக்கப்பட வேண்டும்" (1:20) என்பதே பவுலின் நோக்கமாய் இருந்தது என்பதைத் தயவு செய்து கவனியுங்கள். தூஷித்தல் என்பது தீவிரமான குற்றமாய்[41] இருக்கையில், பவுல் அப்பொழுதும்கூட அவ்விரு மனிதர்களும் போதிக்கப்பட வேண்டும் என்பதையே தமது இலக்காகக் கொண்டிருந்தார். பவுலின் வினைச் சொல் தெரிவானது,[42] அவர்கள் தமது போதனையை ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் நிச்சயமற்றிருந்தார் என்பதை மெய்ப்பிக்கிறது. அவர்கள் தூஷணம் கூறியிருப்பினும் அவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று பவுல் விரும்பியது அவருக்கு மதிப்பளிப்பதாக உள்ளது!*

*இவ்விதமாக, நாம் எவ்வாறு இருக்கக் கூடாது என்பது பற்றி ஒரு எச்சரிக்கையுடன் முதல் அதிகாரம் முடிவடைகிறது. அதிகாரம் 2ல், நாம் என்ன செய்ய வேண்டும் மற்றும் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குக் கவனம் அளிக்கப்பட்டுள்ளது.*

குறிப்புகள்:

[1]புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்களின் மூன்று வகை முறைகள் காணப்படுகின்றன: (1) இயேசு கிறிஸ்து, தேவனுடைய அப்போஸ்தலர் (எபி. 3:1); (2) கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் (மத். 10:2-4; அப். 1:26; கலா. 2:8; 1 கொரி. 15:7-10); (3) 2 கொரி. 8:23; அப். 14:14ல் உள்ளது போல சபையின் அப்போஸ்தலர்கள். இந்தக் கடைசி வகையில், மனிதர்கள் சபையினால் சபையைச் சில வழிமுறையில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகத் தேர்ந்து கொள்ளப்பட்டு, அந்த ஊழியம் அல்லது நிகழ்வுக்காக சபையின் செய்தியாளர்கள் அல்லது *apostoloi* ஆயினர். இது ஒரு அலுவலகப் பணி என்பதற்கு மாறாக பொறுப்புள்ள ஊழியம் என்பதாக நினைக்கப்பட வேண்டும். "அப்போஸ்தலர்" என்பதற்கான *apostolos* என்ற கிரேக்க வார்த்தையானது "கட்டளைகள் கொடுத்தனுப்பப்படும் பிரதிநிதி, செய்தியாளர்" என்று அர்த்தப்படுகின்றது (C. G. Wilke and Wilibald Grimm, *A Greek - English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977], 68). ஒவ்வொரு வகையிலும், இந்த ஊழியத்தை நிறைவேற்றுகின்றவர் தம்மை அனுப்புபவரின் அதிகாரத்துடன் பேசுகின்றார் (லூக். 10:16; யோவா. 13:20 ஆகியவற்றைக் காணவும்). [2]2 பேதுரு 3:18 மற்றும் 2 கொரிந்தியர் 8:1-3, 7ஐக் காணவும், அங்கு நாம் துன்புறுதலின் போது கூட சபைக்குக் கொடுக்கப்பட்ட கிருபையானது நமக்கு ஏராளமான மகிழ்வளிக்க உதவ முடியும் என்று காண்கின்றோம். ஆழமான வறுமையில் உள்ளவர் கூட ஐசுவரியமான/வளம்மிக்க சுயாதீனத்தைக் காண்பிக்கலாம். தேவனுடைய கிருபையானது நாம் ஏராளமான விசுவாசம், சொல்திறமை, அறிவு, அனைத்திலும் உண்மையுடைமை மற்றும் அன்பு ஆகியவற்றைக் கொண்டிருக்க உதவுகிறது. ஒரு சுவிசேஷகரின் ஊழியத்தில் இந்தப் பண்புகள் எவ்வளவு வியப்புக்குரிய பயன்களை அளிப்பதாயிருக்கும்! (See Thayer's definition of *charis* in footnote no. 17.) [3]இந்த இரக்கம் என்பது (Greek: *eleos*) "பரிதாபமான மற்றும் துன்பமுற்றுள்ள மக்களை விடுவிக்க வேண்டுமென்ற விருப்பத்துடன் இணையப்பெற்று அவர்களிடம் காட்டப்படும் இரக்கம் அல்லது நற்பண்பு" என்று அர்த்தப்படுகின்றது (Thayer, 203). உலகப் பிரகாரமான ஆத்துமாக்களை ஒருவர் எதிர்கொள்ளுகின்ற பொழுது இந்தப் பண்பு எவ்வளவு மதிப்புமிக்கதாக உள்ளது! [4]இந்த சமாதானத்திற்கான கிரேக்க வார்த்தை *eirene* என்பது, "கிறிஸ்துவின் மூலம் தனது மீட்பை உறுதிப்படுத்திக் கொண்ட, அதனால் தேவனிடத்திலிருந்து வரும் ஏதொன்றைக் குறித்தும் பயம் அற்ற, தனது பூமிக்குரிய பங்கில் நிறைவு கொண்ட, அப்பங்கு எவ்வகையாயிருப்பினும் அவ்வாறு நிறைவு கொண்ட ஆத்துமாவின் அமைதி நிலை என்று அர்த்தப்படுகின்றது: ரோமர் 8:6" (Thayer, 182). [5]"கற்பித்தல்" என்பதற்கான கிரேக்க வார்த்தை *parangelia* என்பது "... ஒருவரிடமிருந்து செய்தியை இன்னொருவருக்கு எடுத்துரைத்தல் ... அறிவித்தல் ... கட்டளையிடுதல், ஆணையிடுதல்" என்று அர்த்தப்படுகின்றது (Thayer, 479). நடைமுறை அளவில் இவ்வார்த்தை கொண்டுள்ள அர்த்தத்தின் ஆழத்தைக் கவனியுங்கள்: தேவனுடைய செய்தியை "அறிவிக்க" மட்டுமே அவசியம் கொண்டுள்ள சுவிசேஷகர் மகிழ்வுள்ளவராய் இருக்கிறார் - மற்றும் இது மாறுபட்ட உபதேசங்களையும் அறிவித்தல்களையும் நீக்கிப்போடும். இருப்பினும், அவசியப்பட்டால் சுவிசேஷகர் கள்ள போதகரின் போதனையை நிறுத்தும்படி கட்டளையிட, ஆணையிட, அறிவுறுத்த வேண்டியவராய் இருக்கிறார். அவர் மாறுபட்ட உபதேச போதனையில் தொடர்ந்து முயற்சி செய்தால் ஒரு மனிதரின் ஆத்துமா ஆபத்திற்குள்ளாகின்றதே (கலா. 1:6-9). [6]myth (Gk.: *muthos*) - "ஒரு கண்டுபிடிப்பு, தவறான கருத்து" (Thayer, 419). [7]speculation (Gk.: *ekzetesis*) "ஆய்வு செய்தல் ... வீண் விசாரணை ... சர்ச்சை"

(Thayer, 195). [8]dispensation (Gk.: *oikonomos*) - "நிர்வகித்தல்" (Thayer, 440-41). [9]in faith (Gk.: *en pistei*) - இவ்விடத்தில் உள்ள dative case ஆனது தேவனுடைய நிர்வகித்தல் மூலமாக தனியான விதத்தில் கொள்ளப்பட்ட விசுவாசத்தை முன்னிறுத்துகிறது (H. E. Dana and J. R. Mantey, *A Manual Grammar of the Greek New Testament* [New York: Macmillan Co., 1948], 84). [10]swerve (Gk.: *astocheo*) - "இலக்கைத் தவறு விடுதல் ... தவறுதல்" (Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testament* [New York: Harper & Brothers, 1863], 103).

[11]fruitless discussion (Gk.: *mataiologia*) - "... வெறுமையான கடுங்குரல் எழுப்புதல்" (Robinson, 446). தீத்து நிருபத்தில் *mataiologos* வடிவம் பயன்படுத்தப் பட்டுள்ளது. [12]Robinson, 446. [13]Thayer, 392. [14]confident assertion (Gk.: *diabebaioomai*) - "... உறுதியாக்குதல்; எனவே பலமாக உறுதிப்படுத்த" (Robinson, 168). [15]William Barclay, *The Letters to Timothy, Titus and Philemon*, The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1960), 36-37. [16]ஆரோக்கியமான (Gk.: *hugaino*) - "... சுகமான, நல்ல, ... உறுதியான, சுத்தமான, கிறிஸ்தவ உபதேசம் மற்றும் வாழ்வுக்குரிய அம்சத்தில் சரியான ... மோசம் போக்கப்படாத" (Robinson, 736). [17]அக்கிரமக்காரர் (Gk.: *anomos*) - "1 கொரி. 9:21ல் இது 'அக்கிரமம்' என்பதன் கருத்து எதுவுமின்றி புறஜாதிகளுக்குப் பயன்படுத்தப்பட்டது" (Thayer, 48). [18]அடங்காதவர்கள்; கீழ்ப்படியாதவர்கள் (Gk.: *anupotaktos*) - "கட்டுப்பாட்டிற்குக் கீழ்ப்படுத்தப்பட முடியாதவர்கள் ... சட்டமற்றவர்கள், முரண்டு பிடிக்கிறவர்கள்" (Thayer, 52). [19]பக்தியில்லாதவர்கள் (Gk.: *asebes*) - "தேவனிடத்தில் பயபக்தியுள்ள தன்மையைக் கைவிட்டவர்கள் ... பக்தியற்றவர்கள்" (Thayer, 79). [20]பாவிகள் (Gk.: *amartolos*) - "... பாவத்திற்கு ஒப்புக்கொடுத்தவர்கள் ... பாவம் நிறைந்த தன்மையில் பிறரை மிஞ்சக் கூடியவர்கள், விசேஷமாக துன்மார்க்கம் நிறைந்தவர்கள்" (Thayer, 31).

[21]சீர்கெட்டவர்கள், தீட்டானவர்கள் (Gk.: *anosios*) - "... துன்மார்க்கர் ... சீர்கெட்டுப் பிரிந்தவர்கள் ... பயங்கரமான மற்றும் துன்மார்க்கமான துன்புறுத்தாளர்கள்" (Walter Bauer, *A Greek - English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 71-72). [22]வேசிக் கள்ளர்கள் (Gk.: *pornos*) - "வாடகைக்காக இன்னொருவரின் காமத்திற்குத் தனது உடலை விபச்சாரம் செய்கின்றவர், ஒரு ஆண் விபசாரி ... சட்ட விரோதமான பாலுறவில் ஈடுபடும் மனிதர், வேசித்தனம் செய்கின்றவர்" (Thayer, 532). [23]ஆண்புணர்ச்சிக்காரர் (Gk.: *arsenokoites*) - "*arsen* - ஒரு ஆண்; *Koite* = ஒரு படுக்கை; பெண்களுடன் போல ஒரு ஆணுடன் படுக்கையில் கிடக்கின்றவர், ஆணுடன் உறவு கொள்பவர்" (Thayer, 75). [24]மனுஷரைத் திருடுகிறவர் (Gk.: *andrapodistes*) - "ஒரு அடிமை வியாபாரி, மனிதர்களைக் கடத்துகின்றவர்கள், ... சுயாதீனமான மனிதர்களை நீதியற்ற வகையில் அடிமைத்தனத்திற்குள்ளாக்குகின்றவர் ... பிறரின் அடிமைகளைத் திருடி விற்கின்றவர்" (Thayer, 43). [25]பொய்யர் (Gk.: *pseustes*) "... தவறுகின்ற ஒருவர், பொய்யர், வஞ்சகர் ... மேலும் கள்ள போதகர் மற்றும் வஞ்சனை செய்கின்ற ஒருவர் ... தேவனிடம் தவறுகின்ற, வழுவிச் சென்றுள்ள, துன்மார்க்கமான நபர், ரோமர் 3:4" (Robinson, 792). [26]பொய்யாணை இடுகிறவர் (Gk.: *epiorkos*) - "தவறான வாக்குறுதிகள், ஆணைகள் பற்றியது ... பொய்யாணை இடுகிறவர், தவறாக வாக்களிப்பவர்" (G. Abbott - Smith, *A Manual Greek Lexicon of the New Testament* [Edinburgh, Scotland:T. & T. Clark, 1948], 172). [27]இந்த entrusting என்பதற்கான கிரேக்கச் சொற்றொடர் செயப்பாட்டு வினையில் (*epistuthen*) உள்ளது என்பது வனப்புமிக்க நுணுக்கமான கருத்தாக உள்ளது, இது பவுலுக்கு கொடுக்கப்பட்டது என்பதை வலியுறுத்துகிறது; அதை அவர் ஈட்டவோ அல்லது பெறத் தகுதியானவராகவோ இருந்ததில்லை. தேவனுடைய கிருபைதான் பவுலுக்கு இந்த மேன்மையான

*ஊழியத்தை வழங்கிற்று.* [28]benefit (Gk.: *charis*) - *"மகிழ்வு, சந்தோஷம், அக்களிப்பு, இனிமை, வசீகரம், அன்புத்தன்மை ஆகியவற்றை வழங்கும் பொருள் ... தேவன் தமது இரக்கம் நிறைந்த தயவினால் ஆத்துமாக்களின்மீது தமது பரிசுத்தமான செல்வாக்கைத் திருப்பி, அவர்களை கிறிஸ்துவை நோக்கித்திருப்பி, காத்து, பெலப்படுத்தி, கிறிஸ்தவ விசுவாசத்தில், அறிவில், அன்பில் வளரச் செய்து, கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளை அவர்கள் செயல்படுத்தும்படி தூண்டுகின்றார்"* (Thayer, 666). [29]*துன்புறுத்துபவரா அல்லது துன்புறுத்தப்படுபவரா யார் மேலானவர்? தீமை செய்பவராக வெற்றியடைதல் என்று காணப்படுதலா அல்லது தீமை செய்யப்படாத படி நன்மை செய்யத் துன்புறுதலாய்க் காணப்படுதலா எது மேன்மையானது? (1 பேது. 3:15-18; 2:20-24; ரோமர் 12:20, 21ஐக் காணவும்).* [30]enable (Gk.: *endunamoo*) - *"பெலமுள்ளவராக்குதல்"* (Thayer, 214).

[31]consider faithful (Gk.: *hegeomai*) - *"... நடத்துனராயிருத்தல், ஆளுகை செய்தல், கட்டளையிடுதல், அதிகாரம் கொண்டிருத்தல் ... மரியாதையுள்ள செல்வாக்கு, ஆலோசனையில் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றினால் வழிநடத்துதல் ... ஒருவரை மிகவும் மேன்மையாக மதித்தல், 1 தெச. 5:13"* (Thayer, 276). [32]*இந்த வார்த்தையானது கர்த்தருடைய கட்டுப்பாட்டையும் தைரியத்தையும் முதன்மைப்படுத்துகின்றது (கலா. 1:15-24) மற்றும் பவுலின் கீழ்ப்படிதலைக் காண்பிக்கின்றது (அப். 22:10). இந்தக் காரணிகள் சுவிசேஷகரைத் தாழ்மையுடனிருக்கக் காரணமாகி, அதே வேளையில் அத்தாழ்மையை தைரியம் மற்றும் நம்பிக்கையுடன் சமானப்படுத்தவும் செய்கிறது (2 கொரி. 3:12; 2 தீமோ. 4:17, 18). "நான் விவாதம் செய்பவன்" என்பதை அறிந்த நிலையிலும் (ரோமர் 1:14) அதே வேளையில் "... நம்மில் அன்புகூருகிறவராலே நாம் முற்றிலும் ஜெயம் கொள்ளுகிறோம்" (ரோமர் 8:35-39) என்பதை உணர்ந்த நிலையிலும் பக்குவம் கொண்ட அதிகமான சுவிசேஷகர்களைத் தேவன் நமக்கு அருளுவாராக.* [33]*இவ்விடத்தில் பவுலின் சொற்றொடரானது மூன்று வலிவான உண்மைகளை வலியுறுத்துகிறது: (1) கர்த்தர் தமது சிந்தையில் நமக்கென்று ஒரு நோக்கம் கொண்டுள்ளார் (எரே. 1:5; எபே. 1:3-7; கலா. 1:15-24ஐக் காணவும்); (2) தேவன் நம்மைத் தமது ஊழியத்தில் வைக்கின்றார் (அல்லது நம் மீது செயல்படுகின்றார்); (3) நாம் அவரது அருளிரக்கமுள்ள நிலைப்பாடுகளில் ஊழியம் செய்கையில் நன்றி நிறைந்தவர்களாகவும் தைரியமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும், அவரது சித்தம் நிறைவேற்றப்பட அனுமதிக்க வேண்டும் (மத். 26:38-44; 1 கொரி. 12:18; 2 கொரி. 2:14-17; பிலி. 2:12, 13; எபே. 1:22, 23).* [34]appoint (Gk.: *themenas*) - *"அமைத்தல், இடுதல், வைத்தல் ... ஒரு திட்டத்தை இடுதல் ... ஒருவரின் நோக்கத்திற்காகச் செயல்படுத்துதல்"* (Thayer, 622-23). இவ்விடத்தில் பயன் படுத்தப்பட்ட middle voice participle தேவன் நமது வாழ்வில் எவ்வாறு செயலாற்றுகிறார் என்பதை வலியுறுத்துகிறது (குறிப்பு எண். 22ஐக் காணவும்). [35]aggressor (Gk.: *hubristes*) - *"கர்வம் நிறைந்த, அடக்கியாளுகின்ற, காயப்படுத்துகின்ற ஒருவர்"* (Robinson, 736): *"கர்வத்தினால் தன்னை உயர்த்திக் கொள்கின்ற, மற்றவர்கள் மீது அவமானமான வார்த்தைகளைக் குவிக்கின்ற அல்லது வெட்கக்கேடான தவறான சில செயல்களைச் செய்கின்ற ஒருவர்"* (Thayer, 633-34). *பவுல் தாம் துரத்திக் கொண்டிருந்தவர்கள் வேதனை நிறைந்த வகையில் சரணடைய வேண்டும் என்று கூறிய மேன்மையான/மேட்டிமையான ஆவியைக் கொண்டிருந்தார்.* [36]*"நீடிய பொறுமை" என்ற இச்சொற்றொடர் பாவிகளுக்கு எவ்வளவாய் இருதயத்தைத் தொடக் கூடியதாக உள்ளது!* (Gk.: *makrothumia*, *"பொறுமை, சகிப்புத்தன்மை, நிலவரம், உறுதித்தன்மை, நீடிய பொறுமை ... இடர்ப்பாடுகள் மற்றும் தீமைகளில் சகித்திருத்தல் என்று காட்டப்பட்டுள்ளபடி ... தவறுகளுக்கும் பழிவாங்கும் செயலில் தாமதம் ..."; பெயர்ச்சொல் வடிவமான makrothumeo என்பதைக் கவனியுங்கள். இது*

*“நீடித்த ஆவியைக் கொண்டிருத்தல், இருதயத்தை இழந்து விடாதிருத்தல் … மற்றவர்களின் குற்றங்களையும் காயப்படுத்துதல்களையும் சகிப்பதில் பொறுமையாயிருத்தல்; பழிவாங்குதலில் மென்மையாகவும் தாமதமாகவும் இருத்தல் … கோபிக்கத் தாமதித்தல், தண்டிக்கத் தாமதித்தல்’’ என்று அர்த்தப்படுகின்றது* [Thayer, 387]*).* [37]William Barclay, *New Testament Words* (London: SCM Press, 1964), 196-97. Note Romans 12:19-21. [38]good conscience (Gk.: *suneidesis*) - *“பாவங்களின் உணர்வு பெற்ற ஒரு ஆத்துமா … ஒழுக்க ரீதியாக நல்லது கெட்டது எது என்பவற்றை வித்தியாசப்படுத்துகின்ற, நல்லவற்றை மேம்படுத்தி தீயவற்றை ஒழிக்கின்ற, நல்லதைப் பாராட்டி, கெட்டதைக் கண்டனம் செய்கின்ற ஆத்துமா”* (Thayer, 602-3). [39]“thrust” *என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தை apotheo என்பதாகும், இது “புறம்பே தள்ளுதல், மறுத்தல் … ஒருவரைத் தம்மிடத்திலிருந்து புறம்பே துரத்துதல், …” என்று அர்த்தப்படுகின்றது* (Thayer, 70). *கிரேக்க இலக்கணக் கட்டமைப்பு (aposamenoi)* 1 aorist, middle participle *ஆக உள்ளது. இதன்* middle voice *இது ஒரு சுய ஊக்குவித்தலான செயல் என்ற உண்மையை உணர்த்துகின்றது. புறம்பான செல்வாக்குகளை ஈடுபட்டிருப்பினும் கூட எவரொருவரும் இதைச் செய்யும்படியாக்கப்படுவதில்லை, தெய்வீக கட்டளைகளை அறிவிப்பதில் தங்கள் தவறுக்கு சகோதரர்களை, மூப்பர்களை அல்லது “காலங்களை’’ குற்றப்படுத்த முனையும் சுவிசேஷகர்கள், இந்த நிகழ்ச்சிகளில் அந்த மனிதர்கள் மீதே ஏவப்பட்ட பதிவேடானது குற்றச்சாட்டை வைக்கிறது என்பதைக் கவனிப்பது அவசியம். இது aorist tense ஆக உள்ளது என்ற உண்மை செயல்பாட்டுக் கருத்தைக் குறிக்கிறது. ஒருவர் தவறான ஒரே ஒரு செயலினால் - பல ஆண்டுகளாக ஒப்புக் கொடுத்த ஊழியத்தினால் கட்டி எழுப்பப்பட்ட - தனது நல்மனச்சாட்சி அல்லது விசுவாசத்தை விட்டு விலகிச் செல்லக் கூடும்!* [40]Jason Michaels, *The Devil Is Alive and Well and Living in America Today* (New York: Award Books, 1974), 25.

[41]*பிரசங்கியார்கள் தூஷணத்தின் குற்ற உணர்வுடைவர்களாய் இருக்கக் கூடும் என்பதற்கான உதாரணம் ஒன்று இங்குள்ளது. சிலர் மற்றவர்களின் செல்வாக்கைக் காயப்படுத்தக் கூடிய குற்றம் காணல், மறைமுகப் பழிச் சொல்லுரைத்தல், பொல்லாங்குரைத்தல், அடையாளமிடுதல் மற்றும் பொய்யான குற்றம் சாட்டுதல் ஆகியவற்றின் சோதனைகளை விட்டுச் சென்றுள்ளனர், இது அவர்களையே இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக்குகிறது! உபதேசத்தை விட்டு விலகிச் செல்லுதலாயிருப்பினும் அல்லது தனிப்பட்ட தாக்குதல்களாயிருப்பினும், தூஷிக்கின்றவர்கள் கர்த்தருடைய சபைக்கு ஒரு வெட்கக்கேடாகவே உள்ளனர்.* [42]“may be taught” *என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையான “paideuthosin” என்பது நிபந்தனைக்குட்பட்ட செயப்பாட்டு வடிவில் காணப்படுகின்றது.*